**மேலும் இலவச பிரதிகளுக்கும், இலவச பத்திரிகை பிரதிகளுக்கும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.**





இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 21



- ஒரு மித்து நடத்தல் – ஒன்றாக நடப்பது
- தீருவே, இதோ நான் உனக்கு விரோதமாய் வருகிறேன்
- உன்ஷூவில் உள்ள ஒரு சிறுகல் சிறியதியானம்
- யோனாவைப் பற்றிய புத்தகத்தை வாசித்திருக்கிறாயா ?

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# ஒரு மித்து நடத்தல் - ஒன்றாக நடப்பது

இயேசு கலிலேயா கடலோரம் நடந்து செல்கையில் அவர் சந்தித்த சில மீனவர்களுக்கு ஒரு சவாலான அழைப்பை கொடுத்தார். அவர் கூறினார் "என் பின்னே வாருங்கள்." அந்த நான்கு மீன்பிடிப்பவர்களுக்கு கிடைத்த மேன்மை என்னவெனில் அவர்கள் தங்கள் வலைகளையும் தங்கள் வாழ்க்கைக்கு தேவையான எல்லாவற்றையும் விட்டு மிக விசேஷித்த ஒரு மனிதனை பின்பற்றி ஒரு பிரசித்தமான வாழ்நாளை துவங்கினர்.



அது அவர்கள் வாழ்கையை மாத்திரமல்ல மற்ற அனேக மக்களின் வாழ்க்கையையும் மாற்றியது. ஏனெனில் இயேசுவை பின்பற்றி நடக்கவேண்டும் என்ற அவர்களுடைய விருப்பம், நம்மைபோன்ற சாதாரணமான அனேகர் அதையே செய்யகூடும் என காண்பித்தது. அந்த அழைப்பு இன்றும் உள்ளது. ஏனெனில் எல்லா கால கட்டத்திலும் இயேசு ஜனங்களை அவருடைய பாதையை பின்பற்றும் படிக்கும் அவரோடு நடக்கும் படிக்கும் அழைப்பு தருகிறார்.

**வெளியே செல்லுதல்:** வேத காலத்தில் நடப்பதே எல்லா இடங்களுக்கும் செல்லும் ஒருவழியாகும். நாம் அறிந்துள்ளபடி இருமுறை இயேசு கழுதையின் மீது பயணம் செய்தார். ஒருமுறை அவர் குழந்தையாய் இருந்தபோது அவருடைய உயிருக்கு ஆபத்து வந்த நேரத்திலும் மற்றொருமுறை அவர் எருசலேமிற்குள் பிரவேசித்த சமயத்திலும் ஆகும். ஆனால் வழக்கமாக அவரும் அவருடைய சீஷரும் நடந்தே சென்றனர். சுவிசேஷங்களில் முப்பது வெவ்வேறான பிரயாணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இயேசு உபதேசித்த அந்த மூன்றரை ஆண்டுகளில் அவர் 1500 மைல்களுக்கு மேல் நடந்திருக்கவேண்டும் என கணக்கிடப்பட்டுள்ளது.

அவரும் அவரை பின் பற்றியவர்களும் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்திருக்க வேண்டும். மேலும் அவர்கள் அப்படியாக பிரயாணம் செய்தபோது இஸ்ரவேல் தேசத்தை பார்க்கவும் ஆராய்ந்து அதிகமாக அறிந்துக் கொள்ளவும் கிடைத்த ஒரு நேர்த்தியான சந்தர்ப்பமாகும். அதனால்தான் அனேகர் இன் நாட்களிலும் நடந்து செல்லவிரும்புகின்றனர். ஒருபொழுது போக்குபோல அதின் மூலம் அவர்களுக்கு வீட்டிற்கு வெளியில் கிடைக்கும் மகிழ்ச்சியை அனுபவிக்க

சந்தர்ப்பமும் வாழ்கையின் ஓட்டத்திலும் இரைச்சல்களிலும் இருந்து சிறிது வெளியே இருக்கும் அனுபவமும் கிடைக்கும். ஆனால் இயேசுவும் அவருடைய சீஷர்களும் நடந்தது அதினிமித்தமல்ல அவர்களுக்கு அது அத்யாவசியமாக இருந்தது - பிரயாணம் செய்வதற்கான ஒரேவழி அப்படித்தான் ஓர் இடத்தில் அவர் செயல் விளக்கப்படுகிறது. *("நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார் தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லைமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்") (அப்போஸ்தலர் 10:38).*

**தேவனோடு நடப்பது:** தேவன் இயேசுவோடு இருந்தார் என்று கூறப்படுவது போல ஆதி நாட்களில் விசுவாசமுள்ள மனிதர்கள் தேவனுடன் நடந்ததாக எழுதப்பட்டுள்ளது.

*"ஏனோக்கு முன்னூறு வருஷம் தேவனாடே சஞ்சரித்துக் கொண்டிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்" (ஆதியாகமம் 5:22).*

*"நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாய் இருந்தான், நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்'' (ஆதியாகமம் 6:9).*

இதன் கருத்து அவர்கள் தேவனுடன் உல்லாச நடை நடக்கவில்லை, அவர்கள் தங்கள் வாழ்க்கையை ஒழுங்கும் கிரமுமாக அமைத்துக் கொண்டு தேவனுடன் நடந்தார்கள். (அவர் வழியில் நடந்தார்கள்.) அவர்களுடைய வாழ்க்கை தேவனுடன் இசைந்திருந்தது, தீர்கதரிசி ஆமோஸ் ஒரு விசை கேட்கின்றார்.

*''இரண்டுபேர் ஒரு மனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ ?'' (ஆமோஸ் 3:3)*

இயேசு தேவனோடு பூரணமாய் மன ஒற்றுமையோடு இருந்தார். அதை திரும்பதிரும்ப கூறினார் தான் தேவனுடைய கட்டளையை நிறைவேற்றவே வந்ததாக. அவர் தனக்கென்று வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்தார். மேலும் பிதா தன்னிடம் எதைக்கேட்டாரோ அதெல்லாவற்றிற்க்கும் விருப்பத்துடன் கீழ்படிந்தார்.

*"எனக்கு சித்தமானதை நான்தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன்" (யோவான் 5:30).*

*"நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என்பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளை சொன்னேன்" (யோவான் 8:28).*

**சுயம் வெறுத்தல்:** அது எதுவும் இயேசுவிற்கு எளிதாக வரவில்லை,



நமக்கும் அவ்விதமே. அனேக வழிகளில் இயேசுவும் நம்மைப்போலவே இருந்தார். நம் மானிடகுணங்களை அவர் பகிர்ந்து கொண்டார். *(எபிரேயர் 2:14)* நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார். ஆனால் அவர் நம்மைபோல் இல்லாமலும் இருந்தார். இயேசு ஒருமுறையேனும் பாவம் செய்யவில்லை. அவர் எப்பொழுதும் பிதாவிற்கு கீழ்படிந்தார் அது அவ்வளவு எளிதானதல்ல, ஆனால் அவர் தன்னுடைய இயற்கையான விருப்பங்களை மறுத்தும், பூரண கீழ்படிதலுள்ள ஒரு வாழ்க்கை வாழ விரும்பினார். அவர் தன் வாழ்வின் கொள்கை சொல்லாக இருந்ததே அவர் ஒரு முறை ஜெபித்தது போல *"என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது'' (லூக்கா 22:42)*

*"அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு. அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு காரணராகி" (எபிரேயர் 5:7-9).*

நாம் இப்பொழுது இயேசுவுக்கு கீழ்படியவே அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை கவனிக்கவும் அவருடைய வழிகளை பின்பற்ற விரும்பும் போது அவரையே நாம் வாழ்க்கையின் முன் அழைக்கின்றார். அதாவது புதிய ஏற்பாட்டில் விளக்கப்பட்டு இருப்பதுபோல ''ஆவியினால் நடத்தப்பட வேண்டும்'' நம்மை பிரிய படுத்துவதற்காக நாம் வாழாமல் நாம் வாழ்வது தேவனை பிரியப் படுத்தவேண்டும். அப்போஸ்தலனான பவுலும் அதை அப்படியாக இங்கு எழுதுகிறார்.

*"பின்னும் நான் சொல்லுகிறது என்ன வென்றால், ஆவிக்கேற்ற படி நடந்து கொள்ளுங்கள். அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாத படிக்கு இவைகள் ஒன்றுக் கொன்று விரோதமாயிருக்கிறது*

*ஆவியினால் நடத்தப்படுவீர்களானால் நீங்கள் நியாயப் பிரமாணத்திற்க்கு கீழ்ப்பட்டவர்களல்ல. ஆவியின்கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படி பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை."*

*கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலாத்தியர் 5:16-25).*

**சேர்ந்து நடத்தல்:** அந்த கடைசி வரியில் அப்போஸ்தலன் பயன்படுத்தும் கிரேக்கபதம் உணர்த்துவது தேவனுடைய ராஜ்ஜியத்தை நோக்கி நடப்பது தனிமையில் நோக்கமின்றி நடப்பதல்ல. அந்த வார்த்தையின் அர்த்தமாவது நாம்

சேர்ந்து நடக்க வேண்டும். இயேசு மற்றவர்களை அழைத்தது தன்னுடன் பயணம் செய்யவும், மேலும் தனது பணியை தொடர்ந்து செய்யவும் அது கவனத்தோடு செய்யப்பட்ட திட்டமாகும். இவ்விதமான பயணத்தை முடிக்க உதவியும், உற்சாக மூட்டுதலும், அறிவுரையும், ஒருவரை ஒருவர் தாங்குவதும் இல்லாமல் ஒருவராலும் இயலாது.

தேவன்தம் ராஜ்ஜியத்தை நோக்கி பயணம் செய்யுமாறு நம்மை அழைக்கிறார் மேலும் அந்த பெரிய மாற்றத்திற்காக ஆயத்தப்படவே நம் வாழ்க்கை செலவிடப்படவேண்டும். பல ஆண்டுகளாக அனேகர் அவ்விதமான வாழ்க்கையை தெரிந்துக் கொண்டு அதற்கேற்றவிதமாய் நடை போட்டார்கள். ''என்னை பின்பற்றிவாருங்கள்'' என்ற அழைப்பிற்க்கு செவி கொடுக்கவே நமக்கு இப்பொழுது வாய்ப்பளிக்கப்படுகிறது.

**எடிடர்**

**மகிழ்ச்சியின் செய்தி.**

# தீருவே, இதோ நான் உனக்கு விரோதமாய் வருகிறேன்

**ஜான் ராம்ஸ்டென் (லண்டன்)**


The Tyre peninsular as it is today. The original Tyre was on the mainland, but moved to an island. It became joined to the mainland by a causeway built by Alexander the Great, which then silted up to form the present peninsular. Once the world's foremost trading centre Tyre literally disappeared beneath the waves just as Bible prophecy foretold.

நிறைவேறி முடிந்த வேதாகம தீர்க்கதரிசனத்தின் சத்தியத்திற்கு எடுத்துக்காட்டாக, வேதத்தில் கூறப்பட்டுள்ள தீருவைப் பற்றின வீவரங்களை எடுத்துச் சொல்வதிலுள்ள பிரச்சினை மிக எளிதானது. இப்பொழுது தீரு பூமியில் இல்லை. நம் வாசகர்களுக்கு பண்டைய தீருவைப் பற்றிக்காட்டுவதற்கு ஒன்றுமே இல்லை.



அதைப் பற்றிய அத்தாட்சி கிட்டத்தட்ட மறைந்தே போய்விட்டது. தேவன் தீருவைக் குறித்துத் தீர்மானித்ததும் அது தான்.

## அசீரியாவின் காரியமும் ஒப்புநோக்கின் சுலபமே

அசீரியாவை விவரிப்பது மிக எளிது. முதலாவதாக அதன் செயல்பாடுகளின் தன்மை மற்றும் அழிவை வேத்திலிருந்து விவரிக்கலாம் என்பதோடு தேவன் இஸ்ரவேல் புத்திரராகிய தம் மக்களை நடத்தியதில், அசீரியா ஆற்றிய பங்கு பற்றியும் கூறலாம். அடுத்தது: வேதத்திலுள்ள விவரங்களை வரலாறு மற்றும் அகழ்வாராய்ச்சி தரும் பதிவுகளைக் கொண்டு சோதித்தால், அவை சரிதான் என நிரூபிக்க முடியும். தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் அந்த அசீரிய சாம்ராஜ்யத்தின் மீது வந்ததற்கான காரணங்களை வேதவாக்கியங்கள் நம்முன் நிறுத்துகின்றன. அந்த சாம்ராஜ்யம் எப்படி, ஏன் அழிக்கப்படும் என்பதை விவரித்துக் கூறும் பணி நாகூமுக்குக் கொடுக்கப்பட்டது. 1845ல் சர்ஹென்றிலேயர்ட் என்பார் அகழ்வாராயந்த போது, கண்ட வேதத்தில் குறிப்பிடப்பட்ட சில காட்சிகளும், புகைப்பட ஆதாரங்களும், நாகூமின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியதற்கான ஆதாரமும் கண்கள் காணக் கிடைத்த காட்சிகளுமாகும். இதை இன்னும் நம்புவதற்கு ஆதாரம் தேடும் மக்கள் லண்டிலுள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியத்தில் அசீரியன் பகுதியைப் போய்ப்பார்க்க வேண்டும். நினிவேயிலிருந்த அரண்மனை நெருப்பில் எரிந்தபின் கிடைத்த சுவர் பகுதிகள் நாகூம் 3ம் அதிகாரத்தில் வாசிக்கும் கருத்தை உறுதிப் படுத்துகின்றன.

## பாபிலோனைப் பற்றி பிரச்சினையின்றி பேசலாம்.

பாபிலோன் எனும் இந்த மகா பெரிய பட்டணத்தை வேதம், இவ்விதமாக வர்ணிக்கிறது. *''ராஜ்யங்களுக்குள் அலங்காரமும் கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோன்.'' (ஏசாயா 13:19)* பெல்ஷாத்சார், சுவரிம் அசாதாரணமான முறையில் மேதியர், பெரிசியர்களில் விழுந்தது என்பதை வேதம் நமக்குச் சொல்லுகிறது.

புகைப்பட ஆதாரங்கள், அந்நகரத்தின் அழிவுகளை இன்றும் இருக்கிறபடியே - வேதம் சொல்லுகிறபடி குடியற்றதாகக் காணப்படுகிறது. பெர்லினில் உள்ள பெர்கமன் அருங்காட்சியகத்தில், செப்பனிட்டு வைத்துள்ள இஷ்டார் வாயில் அந்தப்பட்டணம் எவ்வளவு பெரியது எனக்காட்டுகிறது. ஆனால் ஏசாயாவின் தீர்க்கதரிசனம், *''பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல் கவிழ்க்கப்படும்'' (ஏசாயா 13:19)* என்றது. எரேமியா 50:18ல் *''இதோ, நான் அசீரியா ராஜாவைத் தண்டித்ததுபோல் பாபிலோன் ராஜாவையும் தண்டிப்பேன்''* என்ற கர்த்தரின் வார்த்தையைக் காண்கிறோம். ஒருகாலத்தில் மாபெரும் பட்டணமாயிருந்த இந்த நகரம் சிறிது சிறிதாக வீழ்ச்சியடைந்து, மனித



Shekel: coin of ancient Tyre

சமுதாயத்தினின்று மறைந்து போக பல ஆண்டுகளாயின. இந்த நகரத்தின் மகிமையை மீண்டும் கொண்டு வர, சர் ஹரசேன் எடுத்த முயற்சியை அவன் தனக்கெனக் கட்டின அநேக மாளிகைகளில் ஒன்றினை இராக் போரின் போது தொலைக்காட்சியில் பார்த்தோம். வாஷிங்டன் போஸ்ட் மற்றும் நியுயார்க் டைம்ஸ் பத்திரிகையாளர்கள் அதை ஒரு புராதன 'பெரும் பித்துப் பிடித்தவனின் டிஸ்னி உலகம்' என வர்ணித்தார்கள். அங்கே மீன்பிடிக்க ஒரு குளம், துரித உணவகம்... இப்படி அங்கு எல்லாமே இருந்தது. ஆகவே *"ராஜ்யங்களுக்குள் அலங்காரமும் கல்தேயருடைய பிரதான மகிமையும்"* திரும்ப நிலைநாட்டப்படவில்லை, இனி ஒரு போதும் அது நடக்கப் போவதுமில்லை. இப்படி எரேமியா 51:64ல் கூறுகிற "இப்படியே பாபிலோன் முழுகிப் போகும், நான் அதின்மேல் வரப்பண்ணும் தீங்கினால் எழுந்திருக்கமாட்டாது" என்ற தீர்க்கதரிசன சத்தியத்தை உலகம் உணரத்தக்க ஆதாரமாகிறது.

## ஆனால் தீரு வித்தியாசமானது.

தாவீது ராஜா மற்றும் சாலமோன் ராஜாவின் காலத்தில், ஏறத்தாழ கி.மு. 1000ல் தெற்கு லெபனோனின் ஒரு முக்கிய பட்டணமாக தீரு இருந்தது. அதை எப்போதும் சீதோனோடு இணைத்துத் தான் பேசுவார்கள். தீருவின் அரசனாகிய ஈராமின் கல்லறை எனக் கருதப்படுவது பெய்ரூட்டிலுள்ள தேசீய அகழ்வாராய்ச்சி அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஈராம தாவீதோடும் சாலமோனோடும் இசைவானதும் வெற்றிகரமானதுமான வணிகத் தொடர்பில் இருந்தான் (1 ராஜாக்கள் 9) 2 நாளாகமம் 2ம் அதிகாரம், 97 எசேக்கியேல் 28:15 ஆகியவை அவன் யாவே வணக்கத்துக்கு மாறிவந்துவிட்டான் என்று எண்ண தோன்றுகிறது. அதற்குப்பின் காரியங்கள் வேகமாகக் கீழ்நோக்கிப் போக ஆரம்பித்தன. அவர்களின் குமாரர்கள் மற்றும் பெயரர்கள் அரியணை ஏறியகாலத்தில் தீரு பாகால் வணக்கத்தின் கேந்திரமாகவும், பிற கீழ்த்தனமான செயல்பாடுகளுள்ளதாகவும் மாறிவிட்டது. இச் செயல்கள் இஸ்ரவேல் அரசனாகிய ஆகாபின் கவனத்தை ஈர்த்தது. அவனைப் பற்றி (1 இராஜாக்கள் 16:33) *"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கும்படிக்குத் தனக்கு முன்னிருந்த ராஜாக்களெல்லாம் செய்ததைப் பார்க்கிலும் அதிகமாய்ப் செய்துவந்தான்."* எழுதியுள்ளது. அவன் பிரச்சினைகளுக்கு ஒரு காரணம் அவன்



சீதோனின் அரசனாகிய யெத்பாகாலின் மகள் ஏசபேலை மணந்து கொண்டான். அவள் தன்னோடு பாகால் வணக்கத்துப் பழக்கவழக்கங்களை இஸ்ரவேலுக்குள் கொண்டு வருவதில் உறுதியாயிருந்தாள். வெகு விரைவில் தீரு, சீதோனின் ராஜாக்கள் இஸ்ரவேலுக்கு எதிர்த்து நின்றார்கள். யோசியா ராஜா மரணமடைந்தது குறித்து மிகவும் சந்தோஷப்பட்டார்கள் (2 நாளாகமம் 35) ஏனெனில் அவன் பாகால் வணக்கத்திற்கு விரோதமாகச் செயல்பட்டான். கடைசியில் எகிப்தியருக்கும் அசீரியருக்குமான போரில் யோசியா இறந்தான். *''ஆ ஆ ஜனசதளங்களின் ஒலிமுகவாசலாயிருந்த நகரி இடிக்கப்பட்டது. அது பாழாக்கப் பட்டிருக்க நான் நிரப்பப்படுவேன்" (எசேக்கியேல் 26:2).* என்றார்கள். ஏனென்றால் கி.மு.586ல் சிதேக்கியாவின் பதினோராம் ஆண்டில் எருசலேம் பாபிலோனியர்களால் ஆக்கிரமிக்கப் பட்டிருந்தது. அதன் விளைவாகத் தீருவின் செல்வம் செழித்தது (எசேக்கியேல் 26:2).

தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள் மேல் வருவதற்கு அது மட்டுமே காரணமில்லை. தீருவின் வணிகர்கள், அடிமை வியாபாரிகளாகவும் இருந்தார்கள் யூதர்களை அவர்களின் முதல் எதிரியான ஏதோமியார்களிடம் இந்த அடிமை வியாபாரிகள் விற்று விடுவதுண்டு (ஆமோஸ் 1:10). அல்லது யோவேல் கூறுவது போல, "யூதாவின் குமாரரையும் எருசலேமின் குமாரரையும்... கிரேக்கரிடத்தில் விற்றுப்போட்டார்கள்... நீங்கள் சரிக்கட்டினதை உங்கள் தலையின் மேல் திரும்பும்படி செய்வேன்." (யோவேல் 3:6) இதைப்போன்ற நியாயத்தீர்ப்பு சகரியவால் (9:3,4) தீருவின் மீது கூறப்பட்டது. "தீரு தனக்கு அரணைக் கட்டி, தூளைப் போல் வெள்ளியையும் வீதிகளின் சேற்றைப்போல் பசும்பொன்னையும் சேர்த்து வைத்தது. இதோ, ஆண்டவர் அதைத் தள்ளிவிட்டு, சமுத்திரத்தில் அதின் பலத்தை முறித்துப்போடுவார். அது அக்கினிக்கு இரையாகும்."

## தீருவின் பொன்தூள்

சகரியாவிலிருந்து காட்டப்பட்டுள்ள மேற்கோள் தீருவின் பன்னாட்டு வணிகச் செயல்பாடுகளிலிருந்து அதற்கு வந்த ஏராளமான செல்வத்தைக் காட்டுகிறது. அந்த கால கட்டத்தில் மத்திய கிழக்கில் அதுவே மாபெரும் சந்தை நாடாக இருந்தது மட்டுமல்ல, கார்த்தேஜ், வெனிஸ், ஆம்ஸ்டர்டம், லண்டன் போன்ற வணிக மையங்களோடு இணைத்துப் பேசுமளவிற்கு இருந்தது.

அதன் வரலாறு, கடைசியில் அதன் வீழ்ச்சி ஆகியவை எசேக்கியேல் தீர்க்கதரிசனத்தில் மூன்று அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 26,28 ஆகிய அதிகாரங்கள் தீரு ஒரு அழகிய பட்டணம் என்றும், சுற்றுலாப் பயணிகளைச் சுண்டி இழுக்கும் இடம் என்றும், இசை மற்றும் கட்டிடக் கலைக்குப் பெயர் பெற்றது என்றும் கூறுகின்றன. 33 வெவ்வேறு பொருள்களுடன் தகரம், வெள்ளி, ஈயம், பிரிட்டனிலிருந்து பித்தளையும் தாமிரமும், வளைகுடா

நாடுகளிலிருந்து நாகரிக உடைகள் மற்றும் கம்பளித் துணிகளும் சவூதி அரேபியாவிலிருந்து இஸ்மவேலர்களிடமிருந்து பெற்று வாணிபம் செய்தது கப்பல்களைச் செப்பனிடும் பணியையும் செய்ததால் அந்நியச் செலாவணிக்கு வழி வகுத்ததோடு, நைல் நதி மீனவர்களுக்கு மீன்பிடிக்கும் தொழிலினால் மீன் விற்பனைக்கும் உதவியது. (ஏசாயா 23:3) அந்த சந்தையில் வாங்குவோரும் விற்போருமென 42 பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. ஆனால் அந்தோ, பரிதாபம்! மக்களும் பணமும் இணையும் பொழுது, மாயை, பொல்லாப்பு, மற்றும் வன்முறை தொடர்வது வழக்கமாயிற்றே! தீரு அதற்கு விதி விலக்கல்லவே! *''உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்து நீ பாவஞ்செய்தாய்..... உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்.....'' (எசேக்கியேல் 28:16-17) "தீருவே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருகிறேன், சமுத்திரம் தன் அலைகளை எழும்பிவரப்பண்ணுகிற வண்ணமாய் நான் அநேகம் ஜாதிகளை உனக்கு விரோதமாக எழும்பி வரப்பண்ணுவேன்" (எசேக் 26:3)* என்று கர்த்தர் உரைப்பதில் ஆச்சரியமில்லை. *"அவர்கள் தீருவின் மதில்களை அழித்து, அதின் கொத்தளங்களை இடித்துப்போடுவார்கள்.''* அதற்கு முன்னால் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இடங்கள் நெருப்பினால் அழியும். *''உன்னைப் பட்சிப்பதாகிய ஒரு அக்கினியை நான் உன் நடுவிலிருந்து புறப்படப்பண்ணி... உன்னைப் பூமியின் மேல் சாம்பலாக்குவேன்.'' (எசேக்கியல் 28:18)* இதையே ஆமோனும் தீர்க்கதரிசனமாக உரைத்தார். *"தீருவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்; அது அதின் அரமனைகளைப் பட்சிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.'' (ஆமோஸ் 1:10)* சகரியாவும் *"அது அக்கினிக்கு இரையாகும்"* என்று கூறியுள்ளார்.



TYRE: MARKET PLACE OF THE ANCIENT WORLD

**அலைகளைப்போல அநேகம் ஜாதிகள்**

தீருவின் முடிவு ஒரே தாக்குதலினால் அல்லது நெருப்பினாலான அழிவு அல்லது மூழ்கடிக்கும் வெள்ளத்தின் விளைவாக வரவில்லை. மாறாக, *"அநேகம் ஜாதிகள்"* ஒரு நீண்ட காலமாக அதின் முடிவு நிகழ பங்கு கொள்வார்கள் என



கர்த்தர் கூறியிருந்தார்.

முதலில் வந்தவர்கள் கி.மு.705ல் வந்த அசீரியர்கள். சல்மனாசேர் வந்து நகரத்தைக் கைப்பற்றினாலும் தீவைவிட்டுவிட்டான். எசேக்கியேலில் அவர்கள் வந்தது குறித்துத் தெளிவாகக் கூறப்படாவிடினும், (ஏசாயா குறிப்பிட்டுள்ளார்) பெய்ரூட்டிலுள்ள தேசீய அருங்காட்சியத்தின் இயக்குனராயிருந்த திரு மாரிஸ் சேபம் *"அசீரியர் கைகளிலிருந்து தீரு எப்படி சமாளித்துத் தப்பியது என எழுதினார். வேறு சிலர் திருவின் வணிகர்கள் தங்கள் கெட்டிக்காரத்தனத்தினால், ஏதோ ஒன்றைக் கொடுத்து அவர்களை விலைக்கு வாங்கியிருக்கலாம் என்று கருதுகின்றார்கள்."*

கி.மு.605ல் கார்கெமிசில் அசீரியர்களைத் தோற்கடித்த பிறகு (இதன் பின்னணி எரேமியா 46ல்), நேபுகாத்நேச்சார் கி.மு.585ல் தன் கவனத்தைத் தீருவின் மேல் திருப்பினான். எசேக்கியேல் 29:17-20 அந்த வரலாறைக் கூறுகிறது. அவனும் சல்மனாசேரைப் போல தீரு பட்டணத்தின் ஒரு பகுதியைப் பிடித்தானே தவிர, 13வருட முற்றுகைக்குப் பின்னும் முக்கியமான வணிகமையத்தைப் பிடிக்கமுடியாமல் போனான். தீரு "சமுத்திரக்கரை துறையிலே" குடியிருந்ததாக வேதாகமம் விவரிக்கிறது. தேவன் நேபுகாத்நேச்சாரின் முயற்சிகளுக்குப் பலனாக, அவன் சேனைக்குக் கூலியாக எகிப்தைக் கொடுத்தார். (29:19).

அடுத்து, மேதியர் பெரிசியர் கி.மு.352ல வந்தார்கள். இந்த அதிகாரங்களில் இவர்கள் தீருவுக்கு வந்தது பற்றி எதுவும் கூறப்படவில்லையென்றாலும் அது குறித்து அகழ்வாராய்த் தொடுத்த சான்றுகளும் ஆதாரங்களும் போதுமான அளவு உள்ளன. அநேகக் கைவினைப் பொருட்களும், நாணயங்களும் மேதியர் பெரிசியரைக் காட்டும் உருவச் சிற்பங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



Ruins of Roman temple at Tyre. Out to sea are waves breaking over submerged ruins

**இப்பொழுது கிரேக்கர்கள் வருகின்றனர்**

30 ஆண்டுகளுக்குப் பின்னர் கி.மு. 332ல் மகா அலெக்சாண்டர் தலைமையில்

மக்கதோனிய கிரேக்கர்கள் தீருவுக்கெதிராய் வந்தார்கள். அவன் எகிப்தை நோக்கிச் செல்வதற்கு அவசரப்பட்டான். நேபுகாத்நேச்சாரைப் போல் நீண்ட காலம் முற்றுகை போட மனதற்றவனாயிருந்தான். 200 ஆண்டுகளுக்கு முன் நேபுகாத்நேச்சார் அழித்துப் போட்டதினால் அங்கு கிடந்த கற்கள் மற்றும் உடைந்த துண்டுகள் ஓடுகளையும் லெபனோனிலிருந்து பெற்ற மரங்களையும் வைத்து ஒரு தரைப்பாலம் அமைத்தான். *“உன் கல்லுகளையும் மரங்களையும் உன் மண்ணையும் கடலின் நடுவிலே போட்டுவிடுவார்கள்.” (26:12)* இப்படிச் செய்தபின்னர் தங்கள் கனமான யுத்த தளவாடங்களை வண்டிகள் மூலம் கொண்டுபோனான் முற்றுகைத் துப்பாக்கிகளை தாமிரத்தை வெட்டி எடுக்கும் சீப்புருதீவிலிருந்து வந்த 120 கப்பல்களும் சீதோனிலிருந்து வந்த 80 கப்பல்களும் தீருவின் தீவுப் பகுதியைக் கடல்வழித் தாக்குதல் செய்ய உதவின. அலெக்சாண்டர் தீருவின் அரணாக இருந்த மதிற்சுவர்களை இடித்துத் தள்ளினான் அதன் பலன் (விளைவு) ? *‘‘உன் பாட்டுகளின் சத்தத்தை ஓயப்பண்ணுவேன். உன் சுரமண்டலங்களின் சத்தம் இனிக் கேட்கப்படுவதில்லை.” (எசேக்கியேல் 26:13).* வெறும் ஏழே ஏழு மாத முயற்சியினால், முந்தைய, மாபெரும் உலகளாவிய வணிக வல்லரசான தீருவை அழித்தான்.



**Ancient (Biblical) Tyre; visible remains taken at low tide.**

இத்தகைய சம்பவங்கள் வணிக உலகெங்கும் அதிர்ச்சி அலைகளை எழுப்பின. தூரத்திலிருந்த கார்த்தேஜ் மற்றும் காஸிற்றரைட் தீவுகள் (பிரிட்டன்) தீருவிலிருந்த தங்கள் வாடிக்கையாளர்களுக்கு நிகழ்ந்தது குறித்து “திகைத்தார்கள்.”

## ஆனால் முடிவு இன்னும் வரவில்லை

அலைகளின் சீற்றத்தைத் தணிக்கக் கட்டப்படும் தடுப்புகளுக்குச் சில சமயம் நேரக்கூடிய கதி அலெக்ஸாண்டர் அமைத்த தரைப்பாலத்திற்கும் ஏற்பட்டது. கற்கள் அங்குமிங்கும் சிதறி, கடலில் தீவின் கரையோரமாகத் தள்ளப்பட்டு நீர்த்தடையாக மாறவே, மிக மிக்க குறைந்த அளவிலேயே மத்தியதரைக்கடல் அலைகள் காணப்பட்டன. கொஞ்சம் கொஞ்சமாகத் தீவின் நிலப் பரப்பு அதிகமாகி, “நடுக்கடலில்” இருந்த தீருவின் தீவுப் பகுதி தீபகற்பத்தோடு சேர்ந்து அதன் பரப்பளவை அதிகமாக்கியது. இது, அதற்குப் பின் படையெடுத்து வந்த ரோமர்கள் தங்களுக்கெனப் பாசறைகளை மட்டுமல்ல, ஒரு மாபெரும் கோவிலையும் கட்டுவதற்கு இடமுண்டாக்கிவிட்டது. அக்கோவிலின் இடிபாடுகள் இன்று பயணிகளைக் கவரும் முக்கியமானவையாக உள்ளன. ஒரு காலகட்டத்தில் சிலுவைப் போர் வீரர்கள் வந்தனர். அதன்பின் தீபகற்பத்தின் வடக்குப் பகுதி லெபனோனின் கடற்படைத் தளமாக மாறியது.



பைபிளிலுள்ள புராதன தீருவைக் குறித்த தீர்க்கதரிசனத்தின் முழுமையான முடிவான நிறைவேறுதல் பைபிள் எழுதப்பட்ட காலத்திற்குப் பின்னரும் கூட வரவில்லை. இந்தப் புராதனத் தீவு வணிக மையத்தைக் கடற்கரையிலிருந்து முற்றிலும் அழித்தது எவை என்றால் கி.பி.3ம் மற்றும் 6ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட தொடர்ச்சியாக நிலநடுக்கங்களும் நிலச் சரிவுகளும் தான். எல்லாமே கடலின் ஆழத்தில் கிடக்கின்றன. ‘‘மிகுந்த தண்ணீர்கள் உன்னை மூடத்தக்கதாய் உன்மேல் சமுத்திரத்தை வரப்பண்ணும்போது....” (26:19)



**Where fishermen cast their nets.**

இந்தச் சம்பவங்களின் தெளிவான விவரங்கள் வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பினும் இதில் தனித்தன்மை ஒன்றும் இல்லை. துருக்கியின் தெற்குக் கடற்கரைப்பகுதியில் ஆராய்ச்சி செய்ததில் லைசியன் கடற்கரையில் இருந்த பண்டைய கிரேக்க, டோரிக் மற்றும் ரோமக்குடியேற்றங்கள் (பவுல் சென்றிருந்த பத்தாரா (அப்போஸ்தலர் 21:1) மற்றும் மீறா (அப்போஸ்தலர் 27:5) எல்லாமே இதே கதியை அடைந்ததாக ஆராய்ச்சிகள் பறைசாற்றுகின்றன. கி.பி.162, கி.பி.320 மற்றும் ஆகஸ்ட் 22,502ல் வந்த பெரிய நிலநடுக்கங்களால் கிரேக்க ரோம இடங்களான கெக்கோவா, காலே மற்றும் அப்பர்லே போன்றவை கடல்கொள்ளப்பட்டன. அநேக வரலாற்று வல்லுநர்கள், அழிந்து கொண்டிருந்த தீரு, முற்றிலுமாக அழிந்து முடிந்தது 502ல் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் என ஒப்புக்கொள்கிறார்கள்.

### அலைகளைப் போல அநேகம் ஜாதிகள்

தீருவைத் தாக்க அநேகம் ஜாதிகள் அலைகளைப் போல வந்தது உண்மையாயினும், தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட அழிவு, வார்த்தை சுத்தமாய், கடலுக்கடியில் மறைந்துபோவதுதான், ஆக, இன்று வேதாகமம் வாசிப்பவர்கள் பழங்காலத் தீருவைப் பார்க்கச் சென்றால், கடற்கரையில் மெலிதாகத் தவழ்ந்து வரும் அலைகளைக் காணலாம். பழைய கட்டிடங்களின் அஸ்திபாரங்கள் கடலுக்கடியில் கிடப்பதைக் காணலாம். பழைய கட்டிடச் செங்கல்கள் மீது மீனவர்கள் தங்கள் வலைகளை விரித்திருப்பதைக் காணலாம். முடிவு பற்றி எசேக்கியேல் கூறுவது என்ன? *“உன்னை வெறும் பாறையாக்கி விடுவேன்; நீ வலைகளை விரிக்கிற ஸ்தலமாயிருப்பாய் இனிக் கட்டப்படாய்... இனி நீ இருக்க மாட்டாய்.”*

இப்பொழுது நாம் ஆரம்பித்த இடத்திற்கே வருவோம். எசேக்கியேலின் தீர்க்கதரிசனத்தின் நம்பகத்தன்மை மற்றும் சத்தியத்திற்கான ஆதாரம், பெரிய நிலநடுக்கம் மற்றும் அதன்விளைவாய் ஏற்பட்ட நிலச்சரிவினால் கடல் மட்டத்திற்குச் சில அடிகள் ஆழத்திலே கிடக்கும் அழிவுகள் மட்டும் தான். இப்படி தேவன் என்ன நடக்கும் என்று சொன்னாரோ அது நடந்தது. வேதாகமம் கூறும் பண்டைய தீருவைப் பார்க்க விரும்புவன் காணக்கூடியதெல்லாம் வான்வரையுள்ள கடல்சார்பின்னணியம் தான். கடல்கொள்ளப்பட்ட தீருவின் அழிவுகளுக்கு மேலே தவழ்ந்து வரும் அலைகள் முந்தைய உலகின் மாபெரும் வணிக நகர் தங்களுக்குள் அடக்கம் எனக் கூறாமல் கூறுகின்றனவோ?

# உன்ஷூவில் உள்ள ஒரு சிறுகல்
## சிறியதியானம்

சமீபத்தில் நாங்கள் இவ்விதமாக கூறிய ஒரு வாக்கியத்தை பார்த்தோம். *‘‘எனக்கு முன்னால் இருக்கும் மலை என்னை நிறுத்தவில்லை, என ஷூவிற்குள்ளே உள்ள ஒரு சிறு கல்லே நான் மேலே ஏறும்போது வேதனையை தருகின்றது.”* இது மிகவும் உண்மை, ஏனெனில் சில சமயங்களில் நாம் ஒரு உயர்ந்த இடத்திற்கு போவோம் பின்னர் நம் ஷூவில் இருக்கும் ஒரு சிறுகல் போன்றவற்றால் தோற்றுப்போவோம்.

தேவனுக்காக பெரியகாரியங்களை செய்வதிலிருந்து எது நம்மை தடை செய்கின்றது? பவுலும் *“மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்.*





*உயர்வானாலும், தாழ்வானாலும் வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மை பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்”* என்று கூறுகிறார்.

தேவனுடைய ராஜ்ஜியத்தை நோக்கி சென்று கொண்டு இருந்த தன்பாதையில் இருந்த எல்லா தடைகளையும் தாண்டி பவுல் செல்லகூடுமானால், நாம் தேவனுக்கும் நமக்கும் இடையே ஒரு சிறு கல்லை அனுமதிக்கலாமா? தேவனுடைய ராஜ்ஜியத்தை நோக்கி நாம் நடைபோட தடைசெய்யும் நம் ஷூவில் உள்ள அந்த சிறியகல் எதற்கு அடையாளமாகும்? அக்கறை இன்மையும் அலட்சியமும் நம்கல்லாக இருக்கின்றதா? சோம்பலும் சலிப்புமா?

சமீபத்தில் நாங்கள் வாசித்தது, அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கனடாவிலும் உள்ள மக்களில் பாதிக்கும் மேலானவர்கள் வெறுப்பில் உள்ளனர் என்பது மேலும் 65 வயதிற்கு மேல் ஆனவர்களுள் 75 சதவிகித்தினர் வெறுப்பில் உள்ளனர் அவர்கள் பார்வைக்கு சலிப்படைந்தவர்கள் மேலும் அதிகமாக வாழ்க்கையே வெறுத்தவர்கள் போலும் நடந்துக் கொள்கின்றனர்.

இயேசு கிறிஸ்துவின் மேல் அன்புள்ள ஒருவர் எப்படி சலிப்படையலாம்? அவர் இப்பூமிக்கு திரும்ப வரும் முன்பதாக உள்ள உற்சாகமான இந்நாட்களில் நாம் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறோம். அவர் வந்த பின்னர் எல்லா தவறுகளையும் சரி செய்வார் நம்வாழ்க்கை மகிழ்ச்சியினாலும், உற்சாகத்தினாலும், நிரப்பப்பட்டிருக்க வேண்டும். பொதுவாகவே சலிப்புடன் இல்லாதவர்களை விட உலகபிரகாரமான நோக்கத்தை உடையவர்கள் குறைவாக சலிப்படைவர். சங்கீதகாரனும் நமக்கு இவ்வாறாக கூறுகின்றார் *“உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாய் இரு அவரே காரியத்தை வாய்க்கச் செய்வார்”* தேவனுக்கு முழுமையான அர்பணிப்பை காட்டும்போது உன் ஷூவில்

உள்ள சிறிய கல்லானது சரியான அளவிற்கு குறைந்துவிடும் பின்னர் நாம் நம் காலில் இருக்கும் எந்த சிறிய அசௌகரியத்தையும் பார்க்காமல் மலைமீது வேகமாக ஓடி ஏறமுடியும்.

இதை சலிப்புள்ள, உணர்வற்ற, சோம்பலுள்ள, ஒன்றும் செய்யாமல் அந்த சிறு கல்லையே நினைத்துக் கொண்டிருக்கும் ஒருவருடன் ஒப்பிடவும் வாழ்க்கை என்பது இத்தகைய சிறு கற்களால் ஆனது ஆனால் நாம் மலையை ஏறியே ஆகவேண்டும் *"இது கர்த்தர் உண்டு பண்ணின நாள்"* அதையே நாம் வைத்துக் கொண்டு என்ன செய்யகூடும்? நம் ஷூவில் உள்ள சிறுகல்லை குறித்து மனம் தளர்ந்து போகவேண்டுமா? நம் வேதனைகளையும் வலிகளையும் குறித்து சிந்தித்து மனம் வெறுப்போடு திரும்பவும் படுக்கைக்கு போகலாமா? சோம்பேறி இப்படி கூறுவதாக நமக்கு சாலமோன் கூறுகிறார். *"இன்னும் கொஞ்சம் தூங்கட்டும், இன்னும் கொஞ்சம் உறங்கட்டும் இன்னும் கொஞ்சம் கைமுடக்கிக் கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ" "கதவு கீல்முனையில் ஆடுகிறது போல் சோம்பேறியும் தன் படுக்கையில் ஆடுகிறான்".*

சோம்பலுள்ள, சுறுசுறுப்பில்லாத, சலிப்புள்ளவர்கள் படுக்கையிலேயே இருப்பர் இல்லாவிட்டால் தங்களுடைய சிறுகற்களை குறித்தும், மற்ற எல்லா வலி வேதனைகளை குறித்தும் முறையிடுவதற்கென்றே எழுந்திருப்பர். ஆனால் கர்த்தருக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களோ மகிழ்ச்சியால் துள்ளி குதித்துக் கொண்டு இருப்பர். ஆகாயத்தில் எடுத்து கொண்டு செல்லப்பட விருப்பவர்களுக்கு ஷூவில் உள்ள ஒரு கல் வேதனையை தராது இயேசுவும் நம்மை சந்தோஷப்பட்டு களிகூறுங்கள் என்று கூறியுள்ளார். அவர் இதை உண்மையிலேயே பொருள்பட கூறினாரா? அல்லது நம் ரட்சகர் வெறும் வார்த்தைகளை கூறினாரா? அவர் நம்மிடம் கூறுகின்றார் *"சந்தோஷப்பட்டு களிகூறுங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும்."*

நம் வாழ்க்கை எவ்வளவு தூண்டுதல் உள்ளதாக இருக்கவேண்டும். நம் தேவன் எவ்வளவு பெரிய தேவன். நம் நம்பிக்கை எவ்வளவு ஆச்சரியமான நம்பிக்கை. உண்மையாகவே கர்த்தர் உண்டு பண்ணின இந்த நாளிலே மகிழ்ந்து களிகூறவேண்டும். நம்மை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே நமக்கு எல்லாவற்றையும் செய்ய பெலன் உண்டு. நம் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து இருக்கிறோம் அவரே காரியத்தை வாய்க்க செய்வார். தேவனுடைய அன்பில் இருந்து நம்மை எதுவும் பிரிக்கமுடியாது. ஒரு சிறுகல் நம் வேகத்தை குறைக்குமா? ஒருபோதும் முடியாது நாம் அர்ப்பணிக்கப்பட்டவர்களா? பவுலுக்கிருந்த தூண்டுதல் நமக்குண்டா? *"உயர்வானாலும் தாழ்வானாலும் வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மை பிரிக்கமாட்டாது."*



# யோனாவைப் பற்றிய புத்தகத்தை வாசித்திருக்கிறாயா ?

## அது கூறுவது யாது ?

அசீரியாவின் தலைநகரமான நினிவேக்கு தேவன் யோனா தீர்க்கதரிசியை அனுப்பினார். 1000 மைல்களுக்கு அப்பாலுள்ள அந்த நகரத்தின் மக்களிடத்தில், ''மனந்திரும்புங்கள்'' அல்லது அழிந்து போவீர்கள்'' எனக் கூறும்படி அனுப்பப்பட்டார். தன் சொந்த ஜனங்களை வெகுகாலம் ஒடுக்கின இந்தக் கொடூரமான மக்களிடம் போக மனமில்லாதவனாய், யோனா எதிர்த்திசையில் கடலில் பயணித்தான்! தேவன் ஒரு பயங்கரமான புயலை அனுப்பி யோனா தன் கீழ்ப்படியாமையை ஒப்புக்கொள்ள வைத்தார். மாலுமிகள் அவனைக் கடலுக்குள் தூக்கி எறிந்ததும் கடல் அமைதியாயிற்று. ஒரு பெரிய மீன் தீர்க்கதரிசியை விழுங்கிப் பின்னர் மூன்று நாட்கள் கழித்து அவரை தண்டிக்கப்பட்ட யோனா நினிவேக்குப் போய் மக்களுக்குப் பிரசங்கித்தான். அவர்கள் மனந்திரும்பினார்கள்; ஆனால் யோனாவுக்கோ அது பிடிக்கவில்லை.



## அச்சமயத்தில் இஸ்ரவேலில் வாழ்க்கை எப்படி இருந்தது ?

இரண்டாம் யெரொபேயாம் இஸ்ரவேலை ஆண்ட 41 ஆண்டுகள் தாம் (கி.மு.825-784) அந்நாட்டின் மிகச் செழிப்பான காலம். வெளிப்பிரகாரமாக செல்வம் கொழித்தாலும், நாட்டில் அக்கிரமம் பரவியிருந்தது. (ஆமோஸ் 2:6-8; 4:1; 6:6; மற்றும் ஓசியா 4:12-14).

அக்காலத்தில் அசீரியா ஒரு மாபெரும் வல்லரசாக இருந்து எப்போதும் அச்சுறுத்தி வந்தது. அதன் தலைநகரான நினிவே 100 அடி உயரசுவர்களும் ஒவ்வொன்றும் 200 அடி உயரத்திலுள்ள 1500 கோபுரங்களும் கொண்டிருந்ததாக வரலாற்று ஆசிரியன் கூறினான்.

**இது எப்போது சம்பவித்தது ?** கி.மு. 8வது நூற்றாண்டாக இருக்கலாம்.

**எத்தனை அதிகாரங்கள் ?** நான்கு சின்ன அதிகாரங்கள். மொத்தம் 48 வசனங்கள்.

**இப்புத்தகத்தை எங்கே காணலாம் ?** சின்ன தீர்க்கதரிசிகள் மத்தியில் பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகத்திலிருந்து எட்டாவது புத்தகம்.

**இதில் நான் பார்க்க வேண்டியது என்ன ?**

கட்டுக்கதையில் வரும் கற்பனை மனிதனல்ல இந்த யோனா. (2 ராஜா 14:25)

அவனுடைய பலனளிக்கும் பிரசங்கம் - மாலுமிகள் புற மதத்திலிருந்து மாறியதைக் கவனிக்கவும் (யோனா 1:5) "இஸ்ரவேலின் தேவனிடம்" அவர்களின் ஜெபம். (யோனா 1:14)

புறஜாதியான நினிவேயின் மக்கள் ஏன் அவ்வளவு சீக்கிரத்தில் மனந்திரும்பினார்கள் ? மீனின் செரிமான நீர்களினால் வெளிரிப்போனதினாலா ? அல்லது முழுவதுமாகக் கடலில் விழுங்கப்பட்ட ஒரு மனிதனைப் பற்றிய செய்தி ஏற்கனவே அவர்களுக்குக் கிடைத்ததினாலா ?

புறஜாதியான நினிவேயின் மக்கள் தேவனை விசுவாசித்ததால் வந்த தாழ்மை (3:5) அவர்களின் ராஜா தன்னைத் தாழ்த்தி (3:6) முழுதேசமும் உபவாசிக்க வேண்டுமென அறிக்கையிட்டான்.



சோர்விலிருந்து, தேவனின் இரட்சிப்பின் மேல் கொண்ட திடநம்பிக்கையிலிருந்து எழுந்த அருமையான யோனாவின் ஜெபம். (2:1-9).

தேவனின் குணாதிசயம் படம்பிடித்துக் காட்டப்பட்டது. அவர் ஒரு பொறுமையுள்ள சிருஷ்டிகர் (1:9) ஜெபத்தைக் கேட்கிறவர் (2:2) இரட்சிக்கிறார் (2:9) தண்டிக்கத் தாமதிக்கிறார் (3:9-10)4:2) கிருபையும் இரக்கமுமுள்ளவர். கோபிக்கிறதற்குத் தாமதிக்கிறவர்; மிகுந்த தயாளமுள்ளவர் (4:2).



**கிறிஸ்துவுடன் யோனாவுக்கிருக்கும் ஒற்றுமைகள்**

✦ யோனா தன் எதிர்காலத்தை மனமுவந்து ஏற்றுக் கொண்டு தன் பாவத்தை ஒத்துக் கொண்டார். (யோனா 1:12). இயேசுவானவர் பாவமற்றவர்; ஆனால் அவரும் மரணத்தை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். (ஏசாயா 53:7 மத்தேயு 20:28).

✦ அழிவிலிருந்து யோனா காப்பாற்றப்பட்டார் (2:6) இயேசுவின் சரீரம், அவரின் உயிர்த்தெழுதலால் அழிவிலிருந்து காப்பாற்றப் பட்டது போல (சங்கீதம் 16:10).

✦ ஒரு மனிதனின் தியாகத்தால் பலர் காப்பாற்றப்பட்டார்கள், இயேசுவின் மரணத்தினால் அநேகர் இரட்சிக்கப் பட்டார்கள். (ரோமர் 5:19)

✦ தம் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாக, இயேசு யோனாவைக் குறிப்பிடுகிறார். (மத்தேயு 12:38-41; 16:4; லூக்கா 11:29-32) - யோனாவின் பிரசங்கத்தை இயேசுவின் பிரசங்கத்தோடு ஒப்பிடும் போது இப்படிக்கூறுகிறார். (மத்தேயு 12:41)

**இது எனக்கு என்ன போதிக்கிறது ?**

தேவன் எங்குமிருக்கிறார். நாம் அவரை விட்டு ஓடமுடியாது.

அவருடைய மனதுருக்கம் எங்குமுள்ள எல்லா மனிதருக்குமுரியது. அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்புகிறார். (1 தீமோதேயு 2:4) தவறிப்போகும் இஸ்ரவேலனான தீர்க்கதரிசியானாலும் சரி புறஜாதியான புறமதஸ்தர்களாயினும் சரி.

சில சமயங்களில் தேவனுடைய ஊழியக்காரன் பலன்தருபவனாக இருப்பதற்கு முன்பு தாழ்மை வரவேண்டும். நினிவேயின் அரசன் முன் நிற்பதற்குப் பதில் யோனாவைக் கப்பலின் தலைவனும் பிற மாலுமிகளும் கேள்விகள் கேட்டுமடக்கினார்கள். (1:10).

தவறை ஒத்துக் கொள்வது போதாது. பாவத்தைக் குறித்து செயல் ஏதேனும் செய்தாக வேண்டும். யோனாவின் அறிக்கைக்குப் பின்னும் கடல் தொடர்ந்து கொந்தளித்தது. யோனாவைக் கடலினுள் எறிந்தபிறகு அது அமைதியாயிற்று. (1:15).

எங்கிருந்து ஜெபித்தாலும், ஒரு மீனின் வயிறாகிய சிறையில் இருந்து ஜெபித்தாலும், ஜெபம் தேவனைச் சென்றடைகிறது. யோனா மனந்திரும்பியபின் தேவன் எந்த வேலைக்கென அழைத்தாரோ, அதைச் செய்ய முனைந்தான். தேவன் எப்போதும் இரண்டாவது தருணம் தருகிறார்.